**வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டம்**

**அடிக்கடி கேட்கப்படுகின்ற கேள்விகள் (FAQs)**

1. காப்பீடு என்றால் என்ன?

காப்பீடு என்பது உங்களை எதிர்பார்க்காத பெரிய இழப்பிலிருந்து உங்களை சிறு சாத்தியத்தின் மூலம் பாதுகாக்கும் முறை ஆகும். இது ஒரே மாதிரியான இடர்களுக்கு உள்ளாக்கப்பட்ட பலரால், தங்களின் சிறு பங்களிப்பின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து சிலருக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கான உத்தி ஆகும்.

காப்பீடு என்பது பணம் சம்பாரிப்பதற்கான ஒரு கருவி அல்ல, அது ஒரு தனி நபர் அல்லது வியாபாரம் எதிர்பாராத இழப்புகளால் ஏற்படும் நிதி பேரழிவை ஈடு செய்ய உதவி வழங்குவதாகும்.

2. பயிர் காப்பீடு என்பது என்ன ?

பயிர்க் காப்பீடு என்பது விவசாயிகளை எதிர்பார்க்காமல் ஏற்படும் பயிர் இழப்புகள் / தோல்விகள் மற்றும் பாதிப்புக்களின் மூலம் ஏற்படுகின்ற நிச்சயமற்ற நிதி இழப்புக்களிலிருந்து அவர்களை பாதுகாப்பதாகும்.

3. வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு என்ன ?

வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு, மழை, வெப்பநிலை, உறைபனி, ஈரப்பதம் போன்ற வானிலை வழியலகுகளால் காப்பீடு பெற்ற விவசாயிகளுக்கு ஏற்படும் எதிர்பாராத

பயிர் இழப்பு மற்றும் பொருளாதார இழப்பு போன்ற இன்னல்களைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட திட்டமாகும்.

4. வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு எவ்வாறு பயிர்க் காப்பீட்டிடமிருந்து வேறுபடுகின்றது ?

பயிர்க் காப்பீடு என்பது குறிப்பாக ஒரு விவசாயிக்கு பயிர் மகசூலில் ஏற்பட்டிருக்கும் குறைவிற்கான நஷ்டஈடு வழங்குதலாகும். ஆனால் வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு என்பது ஒரு விவசாயி நல்லப் பயிர் மகசூல் பெறுவதற்கான அனைத்து முயற்சிகள் எடுத்தாலும், வானிலைகளால் ஏற்படும் பயிர் உற்பத்தி பாதிப்பு மற்றும் பயிர் மகசூல் குறைவு போன்றவற்றிற்கு நஷ்டஈடு வழங்குவதாகும். பயிர் மகசூல் மற்றும் வானிலை வழியலகுகளுக்கிடையே உள்ள வரலாற்று உடன் தொடர்பு மற்றும் அந்நிலைக்கு அப்பால் நிலவும் வானிலைகளால் ஏற்படும் பயிர் பாதிப்பும் கணிக்கப்படுகின்றது. ஒரு விவசாயிக்கு வானிலைத் தூண்டுதல்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் இழப்பு நிலைகளைக் கொண்டு காப்பீடு நஷ்டஈடு வழங்கும் முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டத்தின் ஒரு விவசாயிக்கு ஏற்பட்டிருக்கும் பயிர் இழப்பை, பயிர் மகசூலுக்கான வானிலைகளால் ஏற்படும் பயிர் பாதிப்பும் கணிக்கப்படுகின்றது. ஒரு விவசாயிக்கு வானிலைத் தூண்டுதல்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் இழப்பு நிலைகளைக் கொண்டு காப்பீடு நஷ்டஈடு வழங்கும் முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டத்தின் மூலம் ஒரு விவசாயிக்கு ஏற்பட்டிருக்கும் பயிர் இழப்பைப் பயிர் மகசூலுக்கான வானிலை இலக்குகளை பிரதிநிதிகளாக எடுத்துக் கொண்டு, பயிர் இழப்பிற்கான நஷ்டஈடு வழங்கப்படுகின்றது.

5. எவ்விடங்களில் இவ்வானிலை காப்பீடு திட்டம் செயல்படுத்திப் பார்க்கப்பட்டது?

வானிலைக் காப்பீடு திட்டம் இந்நாட்டில் 2003 காரீஃப் பருவத்திலிருந்து முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆந்திரப்பிரதேசம், சாடிஸ்கார், குஜராத், ஹரியானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மஹாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

6. வானிலைக் காப்பீடு பற்றிய விவசாயிகளின் அனுபவம் என்ன ? அவர்கள் சந்திக்கம் நெருக்கடி என்ன ?

வானிலைக் காப்பீடு என்பது ஒரு புதிய சிந்தனை ஆகும். அதிக அளவு தெளிவான நடைமுறைகள் காப்பீடு காலம் முழுவதிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒவ்வொரு காப்பீடு காலக்கட்டம் முடியும் பொழுதுஈ பெறப்பெற்ற கருத்துக்கள், அனுபவங்கள், உள்வாரி ஆய்வுகளைக் கொண்டு சிறு சிறு மேம்பாடுகள் திட்டத்தில் சேர்க்கப்படுகின்றது. நெருக்கடிகள் நிறையப் பண்ணை இடையே இருக்கும் தூரம், வானிலையைத் தவிர பிற பாதிப்புகளும் காப்புறுதி வழங்காமலிருப்பது, பயிர்களின் அதிகபட்ச விதைப்பு, நடவுக்காலம், மண் வகைகள் மற்றும் மேலாண்மை நிர்வாகத்தில் உள்ள வேறுபாடுகள் தட்பவெப்ப மாற்று பருவ நிலையில் உள்ள மாறுதல்கள், போன்றவைகள் மகசூல் மற்றும் வானிலை அகவரிசைகளுக்கிடையே உள்ள தொடர்பை பலவீனப்படுத்துகின்றன.

7. வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு (WBCIs) திட்டம் என்பது என்ன ? எவ்வாறு இத்திட்டம் தேசிய விவசாயக் காப்பீடு திட்டத்திலிருந்து (NAIS) வேறுபடுகின்றது ?

வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டம் (WBCIs) என்பது நேர்மாறான வானிலை அகவரிசைகளால் ஏற்படும் பயிர் மகசூல் இழப்புகளுக்கு காப்புறுதி பாதுகாப்பு தரும் தனிச்சிறப்புடைய வானிலைச் சார்ந்த திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், காரீஃப் பருவத்தில் ஏற்படும் பாதகமான மழை வருகை (அதிகமாகவோ அல்லது குறைவாகவோ) மற்றும் ரபி பருவத்தில், உறைபனி, வெப்பம், ஈரப்பதம், பருவமல்லாத மழைப் போன்ற வானிலை வழியலகுகளால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதாகும். இது மகசூல் உத்திரவாத காப்பீடு இல்லை.

தேசிய விவசாயக் காப்பீட்டுத் திட்டம் (WAIS) மற்றும் வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டம் (WBCIS) இடையேயுள்ள வேறுபாடுகள்

| வ.எண் | தேசிய விவசாயக் காப்பீட்டுத் திட்டம் (NAIS) | வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டம் (WBCIS) |
|---|---|---|
| 1. | நடைமுறை இடர்பாடுகள் அனைத்திற்கும் காப்புறுதி பாதுகாப்பு வழங்கப்படுகின்றது (வறட்சி, அதிக மழை, வெள்ளம், புயல் காற்று, பயிர் எதிரிகளின் தாக்குதல் போன்றவைகள்) | மழைநீர், உறைபனி, வெப்பம், ஈரப்பதம் போன்ற வானிலைச் சார்ந்த வழியலகுகளால் ஏற்படும் இடர்களுக்கு காப்புறுதி பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. எனினும் வானிலை வழியலகுகளால் பெரும்பாலான பயிர் இழப்புகள் ஏற்படக் காரணமாயிருக்கின்றன. |
| 2. | பத்து வருடங்களுக்கான வரலாற்று மகசூல் தகவல்கள் இருந்தால், இத்திட்டத்தை | வானிலை அகவரிசைகளை வடிவமைப்பது மற்றும் |

| | | |
|---|---|---|
| | எளியதாக வடிவமைக்கலாம். | அகவரிசைகளை பயிர் மகசூல் இழப்புகள் உடன் தொடர்பு செய்வதற்கு 25 வருடங்களுக்கான வரலாற்று வானிலைத் தகவல்கள் தேவைப்படும். |
| 3. | அதிக அடிப்படை இடர்கள் பகுதி (தொகுதி / தெஹசில்) மற்றும் தனிநபர் விவசாயிகள் இடையே உள்ள மகசூல் வேறுபாடுகள் | அடிப்படை இடர்கள், மழைநீர் அதிகமாகவும், உறைப்பனி, வெப்பம், ஈரப்பதம் போன்ற வானிலைகளுக்கு மிதமானதாகவும் இருக்கும். |
| 4. | கோட்பாடுகள் மற்றும் நடைமுறை ஒளிவு மறைவுகளில் ஒப்பு நோக்குங்கால் குறைவாக இருக்கும். | கோட்பாடுகள் மற்றும் நடைமுறை ஒளிவு மறைவுகளின் உள்ள தெளிவு ஒப்பு நோக்குங்கால் அதிகமாக இருக்கும். |
| 5. | தரத்தால் ஏற்படும் இழப்புகள் ஆலோசனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும். | வானிலை அகவரிசைகளின் மூலம் தரம் ஓரளவிற்கு பிரதிபலிக்கப்படும். |
| 6. | அதிகமான இழப்பு கணக்கீட்டு செலவுகள் (பயிர் மகசூல் போட்டிகள்) | இழப்பு கணக்கீட்டு செலவுகள் இல்லை. |
| 7. | காப்பீடு பணக்கோரல்கள் வழங்குவதில் தாமதம் ஏற்படும். | விரைவாக பணக்கோரல்கள் வழங்கப்படும். |
| 8. | பணம் கோருபவர்களின் மானியத்திற்கு உதவி செய்வதால் அரசாங்கத்தின் நிதிக் கடமைகள் திறந்தே இருக்கும். | வெகுமதி மானியத்திற்கு உதவுவதால், அரசாங்கத்தின் நிதிக் கடமைகள் முன்னமே வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடத்தக்கதாக |

| | | |
|---|---|---|
| | | இருக்கும். |

8. வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டம் (WBCIS) எவ்வாறு செயல்படுகின்றது ?

வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டம் (WBCIS) தொகுதி / பகுதி அணுகுமுறையின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றது. நஷ்டஈடு வழங்குவதற்காக ஒரு மேற்கோள் பிரிவுப் பகுதி (RUA)யை சம அமைப்பான காப்பீடு பிரிவாக கருதப்படுகின்றது. மேற்கோலப் பிரிவுப் பகுதி (RUA) அப்பகுதியில் குறிப்பிட்ட பயிரைப் பயிர் செய்யும் அனைத்துக் காப்பீடு விவசாயிகளுக்கும் மாநில அரசால் அப்பருவம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அறிவிக்கப்படும். அப்பகுதியே பணக்கோரல்களைக் கணக்கீடு செய்யப்படும் பகுதியாக இருக்கும். ஒவ்வொரு மேற்கோல் பிரிவுப் பகுதியும் ஒரு மேற்கோல் வானிலை நிலையத்துடன் இணைக்கப்படும். அவ்வாறு பெறப்படும் அப்போதைய வானிலை தகவல்களைக் கொண்டு, பணக்கோரல்கள் கணக்கீடு செய்யப்படும். பாதகமான வானிலைச் சம்பவங்கள் ஏதேனும் அப்பருவத்தில் நிகழ்ந்தால், காப்பீட செய்தோர், பணம் கோரும் உரிமையுள்ளது. அவ்வுரிமைகள் பணம் கொடுக்கும் முறையில் குறிப்பிடப்பட்டுள்ள வானிலை தூண்டுதல்கள் மற்றும் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்ததாகும்.

தொகுதி அணுகுமுறை என்பது தனிநபர் அணுகுமுறைக்கு நேர்மாறானது அதாவது தனிநபர் அணுகுமுறையில் காப்பீடு பெற்ற ஒவ்வொரு விவசாயிக்கு தனிநபர் இழப்புகளைக் கொண்டு நஷ்ட ஈடு வழங்கப்படும்.

9. ரபி பருவத்திற்கேற்றவாறு வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டம் (WBCIS) எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது?

வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டம், பருவமல்லாத / அதிக மழைநீர் பொழிதல், வெப்பம், உறைபனி, ஈரப்பதம் போன்ற வானிலைகளால் ஒரு காப்பீடு பெற்ற விவசாயிக்கு ஏற்படும் நஷ்டத்திலிருந்து பாதுகாப்பு கொடுக்கப்பட்டதாகும். பயிர் மகசூலுக்கு வானிலை அகவல்களால் ஏற்படும் பாதக நிலைகளைக் கொண்டு, பரவலான தூண்டுதல்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேற்கோல் பிரிவுப் பகுதியிலிருந்து பெறப்பட்ட வானிலை வழியலகு (மேற்கோள் வானிலை நிலைய வானிலைத் தகவல்கள்) நிச்சயமான நேர்மறையான பாதகங்களைக் கொண்டு, பணக்கோரல்கள் எழுப்பப்படும். பயன்பாடு, அட்டவணையில், குறிப்பிடப்பட்ட காலத்திற்கான பெறப்பட்ட வெப்பநிலை குறிப்பிடப்பட்ட “வெப்பநிலைத் தூண்டுதல்” களுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால் பயிர் இழப்பு நேரிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் திட்டத்தின் விதி முறைகள் மற்றும் நிபந்தகைகளுக்கேற்ப குறிப்பிட்ட பயிரைப் பயிர் செய்ய காப்பீடு பெற்ற அனைத்து விவசாயிகளும், இவ்வாறு வெப்ப நிலையில் ஏற்படும் பாதகமான மாறுதல்களால் பாதிக்கப்பட்டிருந்தால், பணம் கோருதலுக்கு தகுதியானவராவார்கள்.

10. தற்போதைய வானிலை வழியலகுகள் பெறப்படும் மேற்கோல் வானிலை நிலையத்திலிருந்து எனது பண்ணையிலிருந்து அதிகத் தூரம் இல்லை என்பதைத் தான் எவ்வாறு அறிந்து கொள்வது ? அந்நிலையம் மிகத் தொலைவில் இருந்தால் தான் எவ்வாறு பயன்பெற முடியும் ?

ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய வானிலை அனுபவங்கள் (குறிப்பாக மழைநீர் அளவு) ஒரு சிறிய பூகோளப் பகுதிகளில் வேறுபடும். ஆனால் இரண்டு வாரங்கள் மாதம் அல்லது ஒரு பருவம் என்ற பார்க்கையில் சரிசமமாகிவிடும். தொகுதி / தெஹசில் போன்ற நிலைகளில் உள்ள மேற்கோல் வானிலை நிலையங்கள், மேற்கோல் பிரிவுப் பகுதியில் உள்ள தனிநபர் விவசாயிகளின் வானிலை அனுபவங்களை பிரதிபலிக்கும்.

11. மேற்கோல் வானிலை நிலையம் செயலிழந்தால் என்ன செய்வது ? வேறு ஆதாரங்கள் இருந்தால், என்னுடைய பணக்கோரல் தொகை எனக்கு கிடைக்குமா ?

அபூர்வமான நாட்களில் ஏற்படும் கருவி செயலிழப்புகளால், தகவல்களைப் பதிவு செய்ய முடியாமல் போகும் நிலைகளில், அதற்குத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட வழிகள் உள்ளன. எந்தத் தடையில் இல்லாமல் தகவல்களை பதிவு செய்யும் வகையின் ஈடுகொடுக்கும் திட்டங்கள் சேவை வழங்கபவர்களால் உத்திரவாதமளிக்கப்படுகின்றது. நீண்ட காலமாக மேற்கோல் வானிலை நிலையங்கள் செயல்படாமல் இருக்கும் தீவிர சூழ்நிலையில் இதற்கு ஈடுகொடுக்கும் நிலையில் தகவல்களை பதிவு செய்யும் வானிலை நிலையங்களின் தகவல்கள் பயன்படுத்தப்படும்.

12. எவர்களெல்லாம் வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டத்தை (WBCIS) பெறத் தகுதியானவர்கள் ?

முன்னோடிப் பகுதிகளிலுள்ள எந்த மேற்கோள் பிரிவுப் பகுதிகளில் பயிரை (திட்டத்தில் காப்புறுதியிற்கு தேர்வு பெற்றவைகள்) பயிர் செய்யும் அனைத்து

விவசாயிகளும் (பங்கு உற்பத்தியாளர்கள் மற்றும் குத்தகை உற்பத்தியாளர்கள் உட்பட) இத்திட்டத்தில் காப்புறுதி பெறுவதற்கு தகுதியானவர்கள்.

எனினும் கடன் வழங்கும் வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்ற அனைத்து விவசாயிகளும், இத்திட்டத்தை கட்டாயமாகவும் மற்ற பிறருக்கு தேர்வு முறையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

13. காப்புறுதி பாதுகாப்புத் தொகை (காப்பீடு தொகை) எவ்வாறு கணக்கிடப்படுகின்றது ?

காப்பீடு பாதுகாப்புத் தொகை (காப்பீடு தொகை) பெரும்பாலும் ஒரு பயிரை உற்பத்தி செய்ய காப்பீடு பெற்றோருக்காகும் இடுபொருள் செலவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. குறிப்பிட்ட பரப்பளவிற்குள் (எக்டர்) இந்திய விவசாய காப்பீடு நிறுவனம் (AFC) மாநில அரசாங்க வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு பருவம் தொடங்கும் தருணத்தில், காப்பீடு தொகை முன் அறிவிப்பார்கள். இத்தொகை வெவ்வேறு பயிர்கள் மற்றும் மேற்கோள் பிரிவுப் பகுதிகளுக்கிடையே வேறுபடும். காப்பீட்டில் இருக்கும் முக்கிய வானிலை வழியலகுகளின் விகிதங்கள் வானிலை வழியலகுகளின் முக்கியத்துவத்தைப் பொருத்து, காப்பீடு தொகை மேலும் விநியோகிக்கப்படுகின்றது.

14. கடன் பெற்ற விவசாயிகள் மற்றும் பிறருக்கு காப்பீடு தொகை எவ்வாறு கணக்கிடப்படுகின்றது ?

கடன் பெற்ற விவசாயிகளுக்கான ஒரு பயிருக்கான காப்பீடு தொகையை காப்பீடு தொகையையும் முன்பே அறிவிக்கப்பட்ட இடுபொருட்களின் செலவு அப்பயிரை

விளைவிக்கும் பரப்பளவைக் கடன் வாங்குவதற்கான படிவத்தில் குறிப்பிட்டுள்ளதாகக் கொண்டு பெருக்குவதால் கிடைப்பதாகும்.

இத்தொகை கடன் வழங்கும் வங்கியால் ஒரு விவசாயிக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச கடன் பெறும் எல்லையைக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

மற்றவர்களுக்கு (கடன் பெறாதவர்கள்) ஒரு பயிருக்கான காப்பீடு தொகையை கணக்கிடுவதற்கு, காப்பீடு தொகை முன்பே அறிவிக்கப்பட்ட இடுபொருள் செலவுகள் ஒரு குறிப்பிட்ட பயிரை உற்பத்தி செய்யவுள்ள பரப்பளவையும் பெருக்குவதால் கிடைக்கும் தொகையாகும் மற்றும் இத்தொகை காப்பீடு திட்டறிக்கை படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

15. ஒரு விவசாயி இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வானிலை வழியலகுகளுக்கு காப்பீடு காப்புறுதி பெற வேண்டுமா அல்லது ஒரு குறிப்பிட்ட பயிர் நிலைக்கு மட்டும் எடுத்தால் போதுமா ?

2007-08 ரபி பருவத்தில் வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு முன்னோடித் திட்டத்தை ஒரு முழுமையான அனைத்து வானிலை வழியலகுகளுக்கான காப்பீடு காப்புறுதி திட்டமாகவே ஒரு விவசாயி சிறிய அல்லது அனைத்து விவசாயி வழியலகுகளுக்கும் பாதுகாப்பு காப்பீடு பெறுவதற்காக எந்தத் தீர்மானமும் எடுக்கத் தேவையில்லை.

16. வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டத்திற்கு (WBCIS) வெகுமதிகள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன ? வெகுமதி விகிதங்கள் எவ்வளவு ?

வெகுமதி விகிதங்கள் எதிர்பார்த்த இழப்பை சார்ந்திருக்கின்றது. எதிர்பார்த்த இழப்பு, 25 முதல் 100 வருடங்களாக பெறப்பட்ட வானிலை வழியலகுகள் மற்றும் பயிர்களுக்கு பொருத்தமான வானிலைத் தேவைகள் போன்ற காரணங்களை உள்ளடக்கியது. வெகுமதி விகிதங்கள், ஒவ்வொரு மேற்கோல் பிரிவுப் பகுதி மற்றும் பயிர்களுக்கிடையே வேறுபடும்.

எனினும் விவசாயிகளுக்கான வெகுமதி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு விடும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வெகுமதி (விகிதங்களுக்கு) மேல் இருப்பனவற்றை மத்திய மற்றும் உரிய மாநில அரசு 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும். பல்வேறு பயிர்களுக்கு விவசாயிகள் கட்ட வேண்டிய வெகுமதி விகிதங்கள் பின்வருமாறு.

| **உணவுப் பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள்** | | |
|---|---|---|
| **நெ.** | **பயிர்கள்** | **காப்பீடு விவசாயிகள் கட்ட வேண்டிய வெகுமதி** |
| 1. | கோதுமை | 1.5 சதவிகிதம் அல்லது இழப்பு விகிதம் குறைவாக இருக்கும் எதுவாயினும் |
| 2. | பிறப் பயிர்கள் (பிற தானியங்கள், பயிறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள்) | 2.0 சதவிகிதம் அல்லது இழப்பு விகிதம், குறைவாக இருக்கும் எதுவாயிருப்பினும் |
| **ஓர் ஆண்டு வணிக / தோட்டக்கலைப் பயிர்கள்** | | |
| | **வெகுமதி விவரம்** | **மானியம் / வெகுமதி** |
| 1. | 2 சதவிகிதம் வரை | மானியம் இல்லை |
| 2. | >2-5 சதவிகிதம் | 25 சதவிகிதம் குறைந்தபட்ச நிகர வெகுமதி 2 சதவிகிதம் விவசாயிகளால் கட்டப்பட வேண்டும். |
| 3. | >5-8 சதவிகிதம் | 40 சதவிகிதம் குறைந்தபட்ச நிகர வெகுமதி 3.75 சதவிகிதம் விவசாயிகளால் |

| | | |
|---|---|---|
| | | கட்டப்படவேண்டும். |
| 4. | >8 சதவிகிதம் | 50 சதவிகிதம் குறைந்தபட்ச நிகர வெகுமதி 4.8 சதவிகிதம் மற்றும் அதிகபட்ச 6 சதவிகிதம் விவசாயிகளால் கட்டப்படவேண்டும். |

கடன் பெற்ற காப்பீடு விவசாயிகளுக்கு நிகல வெகுமதி கட்டக் கடன் வழங்கிய வங்கியே நிதியுதவி செய்யும்.

17. வானிலை சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டத்தில் (WBCIS) காப்பீடு காப்புறுதி பெறுவதற்காக தேர்வு பெற்றப் பயிர்கள் எவை ?

2007 ரபி பருவத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட பயிர்களுக்கு, பீஹார், ஹரியானா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டம் முன்னோடியாக செயல்படுத்தப்பட்டது.

18. நான் எப்பொழுது வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டத்தை பெற முடியும் ?

அபாயக் காலங்கள் தொடங்குவதற்கு முன்பாகவே, குறிப்பிடப்பட்ட தேதியில் விவசாயிகள், வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டத்தைப் பெறலாம். இத்தேதிகளில் வானிலை வழியலகுகளால் ஏற்படும் அபாயங்கள் தொடங்குவதற்கு அறிவிக்கப்படும் மற்றும் இத்தேதிகள் மாநிலங்கள் சார்ந்ததாக இருக்கும் விளக்கமாக கூறுவதென்றால், ஒரு பயிருக்கு உறைபனி காலம் டிசம்பர் 2007ல் தொடங்குகின்றது மற்றும் பருவமல்லாத

மலைப் பிப்ரவரி 2008ல் வருகின்றது என்றால், ஒரு விவசாயி இக்காப்பீட்டை நவம்பர் இறுதி வரை வாங்கலாம்.

19. ஒரு விவசாயி, பயிர்க் காப்பீட்டை, தேசிய விவசாயக் காப்பீடு திட்டம் (NAIS) மற்றும் வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டம் (WBCIS) முன்னோடித்திட்டம் போன்ற இரண்டையும் பெற முடியுமா ?

முடியாது. தேசிய விவசாயக் காப்பீடு திட்டம் (NAIS) வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு முன்னோடித் திட்டம் (WBCIS) செயல்படும் பகுதிகள் மற்றும் தேர்வு பெற்ற பயிர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

20. வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை (WBCIS) நான் எவ்வாறு பெறுவது ?

ஒரு பயிருக்கான அனுமதிக்கப்பட்ட கடன் எல்லை கடன் பெற்ற விவசாயிகளுக்கு இத்திட்டம் கட்டாய முறையில் கடன் வழங்கும் வங்கியால் வழங்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட பயிரைப் பயிர் செய்வதற்காக கடன் படிவத்தில் கொடுத்துள்ள பரப்பளவு மற்றும் அப்பயிருக்குரிய அனுமதிக்கப்பட்ட கடன் எல்லையைப் பொருத்து, கடன் வழங்கும் வங்கியால் காப்பீடு தானாகவே செய்யப்பட்டு விடும்.

மற்றவர்கள் (கடன் பெறாத விவசாயிகள்) வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டத்தை (WBCIS) கீழ்மட்ட நிலையில் இருக்கின்ற கடன் வழங்கும் (நிதி நிறுவனங்கள்) பிணையங்கள், காப்பீடு இடைத்தரகர்கள் மற்றும் இந்திய விவசாயி காப்பீடு நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலமும் பெறலாம்.

வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டத்தில் பணக்கோரல்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேற்கோல் வாநிலை நிலையத்திலிருந்து (RWS) பதிவு செய்யப்பட்ட பெறப்பட்ட வானிலை தகவல்களிலிருந்து குறிப்பிட்ட வானிலைத் தூண்டுதல்களில் இருக்கின்ற வேறுபாடுகளைக் (பாதக வானிலை நிகழ்வுகள்) கொண்டு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பணக்கோரல்கள் வழங்கப்படும். குறிப்பிட்ட மேற்கோல் பிரிவுப் பகுதியில் குறிப்பிட்ட பயிருக்கு அதே அளவு பாதக வானிலை நிகழ்வுகள் மற்றும் அதே விகித அளவுப் பயிர் மகசூல் இழப்பைக் கொண்டு அதே விகித ஈடு தொகை வழங்கப்படும்.

22. நான் எவ்வாறு வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டத்தில் பணக்கோரல்களை எழுப்புவது ?

பணக்கோரல் தீர்வு / தொகை பெறுதல் போன்றவை மேற்கோல் வானிலை நிலையங்களில் (RWS) பதிவு செய்யப்பட்ட வானிலைத் தகவல்களைக் கொண்டு தானியங்கி முறை மூலம் செயல்படும் நெறிமுறையாகும். இத்திட்டத்தில், காப்பீடு செய்த விவசாயிகள், பணக்கோரல்களை எழுப்பத் தேவையில்லை.

23. ஆரம்பத்தில் உங்களுடைய காப்பீடு விவசாயிகள் மேற்கோல் வானிலை நிலையங்களை (RWS) சுற்றியே இருப்பர் மற்றும் அவர்களுக்கும் அதேத் தகவல்களின் அடிப்படையில் காப்பீடு வழங்கப்படும். அப்படியென்றால் காப்பீட்டுத் தொகை அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்குமா ?

ஒரு குறிப்பிட்டப் பிரிவுப் பகுதிக்கு (ஏக்கர் / எக்டர்) ஒரு பயிற்சிக்காக வழங்கப்படும் தொகை, அப்பகுதி மேற்கோல் வானிலை நிலையங்களிலுள்ள அனைத்து காப்பீடு விவசாயிகளுக்கு ஒரே மாதிரியாகவே இருக்கும்.

24. பயிர் காப்பீட்டில் பணக்கோரல்களுக்கான தீர்வு பெற நீண்ட காலம் ஆகுவது போல வானிலைச் சார்ந்த பயிர்க் காப்பீடு திட்டத்திலும் காலம் ஆகுமா ? எவ்வளவு நாட்கள் ஆகும் ?

இல்லை. காப்பீடு / அபாய காலக்கட்டத்தின் இறுதியில் இருந்து 45 நாட்களுக்குள், வானிலைச் சார்ந்த காப்பீடு ஈடு தொகை வழங்கப்பட்டு விடும், மரபு பயிர்க் காப்பீடுத் திட்டத்தில், பணக்கோரல்கள் வழங்குவதற்கு நீண்ட காலம் ஆகுவதற்கு, பணக்கோரல் நடைமுறைகள் மகசூல் கணக்கீட்டைச் சார்ந்திருப்பதே ஆகும்.

25. பாதக வானிலை நிகழ்வுகள் அல்லாத மற்றவைகளாக ஏற்படும் உற்பத்தி இழப்புகளை, வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டம் (WBCIS) எவ்வாறு குறிப்பிடுகிறது ?

இரண்டு காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்படும். கட்டுப்படுத்த முடியாத வானிலை நிகழ்வுகள் மற்றும் பயிர் எதிரி மற்றும் நோய்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகுதல், வெப்பநிலை, மழைநீர், ஈரப்பதம், சூரிய ஒளிக்கதிர், புயல் காற்று போன்ற வானிலைகளின் மாறுபாடுகளால் வானிலை இடர்கள் ஏற்படுகின்றன. ஆகையால் வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு திட்டம் (WBCIS) வானிலை வழியலகுகளால் ஏற்படும் பாதிப்புகளை / இழப்புகளை மட்டுமே குறிப்பிடுகின்றது.

26. வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீட்டால் (WBCIS) விவசாயிகள் எவ்வாறு பயனடைகிறார்கள் ?

பயிர் உற்பத்தி நிர்வாகத்தில் ஏற்படும் இடர்களை, ஒரு விவசாயி வானிலைச் சார்ந்த பயிர் காப்பீடு திட்டத்தை பெறுவதன் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெறலாம். இத்திட்டத்தின் முக்கிய நன்மைகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

1. நேர்மாறான வானிலை (மழைநீர், வெப்பநிலை, ஈரப்பதம்) தூண்டுதல் நிகழ்வுகளை சுதந்திரமாக உறுதிப்படுத்தவும் அளக்கவும் முடியும்.
2. வேமாக பணக்கோரல்களுக்கு தீர்வு காண முடியும், அதாவது காப்பீடு கால இறுதியிலிருந்து 45 நாட்களுக்குள் பெற்றவிட முடியும்.
3. கடன் பெற்ற / பெற்றிராத, சிறிய / குறுகிய அல்லது பிறர்கள், உரிமையாளர்கள் / குத்தகைக்காரர்கள் / பங்கு உற்பத்தியாளர்கள் என்று எந்த வேறுபாடில்லாமல் அனைத்து விவசாயிகளும் இக்காப்பீடு திட்டத்தைப் பெறலாம்.
4. அரசாங்கம் வெகுமதியில் மானியம் வழங்குவதால், விவசாயிகளால் வெகுமதியை எளிதாக கட்ட முடிகின்றது.
5. நேர்மாறான வானிலை நிகழ்வுகளினால் ஏற்படும் தெளிவான வானிலை இடர்களை குறைக்கும் விதத்தில் முழுமையான குறிக்கோள்கள் ஏற்புடைய மற்றும் நேரடியாகத் தொகையை வழங்குதல் போன்ற சிறப்பம்சம் கொண்டுள்ளது.
6. காப்பீடு செய்தோர், பணக்கோரல் படிவத்தையோ அல்லது பிற ஆவணங்களையோ தங்களுடைய இழப்பிற்கான ஆதாரமாக காட்டத் தேவையில்லை. தொகுதி / தெஹசில் நிலையிலுள்ள மேற்கொல் வானிலை நிலையத்திலிருந்து பெறப்பட்ட

வானிலைத் தகவல்களைக் கொண்டு பணக்கோரல் தொகை வழங்குதல்கள் தானாகவே கணக்கிடப்பட்டு விடும்.

7. நஷ்டஈடு தொகை, வானிலை தகவல்களைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதால், காப்பீட்டாளர்கள் பயிர் மகசூலை பெருக்குவதற்காக பெற்ற சலுகைகளை தாங்களே வைத்துக் கொள்ளலாம்.

27. பயிர்க் காப்பீடு / வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு இதில் எந்தக் காப்பீடு பொருளாதார ரீதியாக எனக்கு உகந்ததாக இருக்கும் என்று தீர்மானிக்க உதவுங்கள் ?

நீங்கள் பாதிப்புக்களுக்குள்ளாகும் இடர்கள் என்ன ?

உங்கள் பண்ணையில் இழப்புகள் உண்டாகும் சாத்தியம் உள்ளதா மற்றும், சாத்தியம் உள்ளதென்றால் இழப்பின் மதிப்பு சராசரியாக எவ்வளவு இருக்கும் (உங்கள் பகுதி வறட்சி / வெள்ளம் / உறைபனி / வெப்பம் போன்றவற்றால் பாதிப்புக்குள்ளாகுமா ?

1. உங்களால் எவ்வளவு பெரிய இழப்பை ஏற்க முடியும் ? ஒரு திருமணம் / நிகழ்ச்சி / அபாயக் காலங்களில் ஏற்படும் செலவுகளை பணம் / வங்கிக் கணக்கு / பிற சேமிப்புகள் போன்றவற்றின் மூலம் சமாளிக்க முடியும்.

2. உங்களுடைய காப்பீடு தேர்வு வசதிகள் என்ன ?

(தயவு செய்து நினைவில் கொள்க. அதாவது இந்திய விவசாயக் காப்பீடு நிறுவனம் என்பது அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டில் சேவை செய்யவேண்டும் என்ற தனி நோக்குகள் உருவாக்கப்பட்டது என்பதை )

3. எவ்வளவு விவசாயிகளுக்கு இந்திய விவசாயக் காப்பீடு நிறுவனம் காப்புறுதி வழங்கும்?

(ஒரு வருடத்திற்கு கோடி விவசாயிகளுக்கு)

4. என்னால் காப்பீடு செலவை ஏற்றுக் கொள்ள முடியுமா ?

(அரசாங்க மானியத்தில், உங்கள் மிகவும் நியாயமான வெகுமதியை செலுத்த முடியுமா)

28. இறுதியாக எனக்கு, ஒரு விளக்கத்தின் மூலம் முன்னோடி வானிலைச் சார்ந்தப் பயிர் காப்பீடு எவ்வாறு செயல்படுகின்றது என்பதை விளக்கவும் ?

ராஜஸ்தானிலுள்ள கங்கா நகர் மாவட்டத்தில் கங்கா நகர் தெஹசிலில் கோதுமை பயிருக்கான விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| மாவட்டம் : கங்கா நகர் | தொகுதி : கங்கா நகர் |
| பயிர் : கோதுமை | விதைப்பு : வரையறுக்கப்பட்ட விதைப்புக் காலம் |
| ஒரு எக்டருக்கான காப்பீடு தொகை (ரூ) | 22,500 |
| ஒரு ஏக்கருக்கான காப்பீடு தொகை (ரூ) | 9,000 |

மேற்கோல் வானிலை நிலையம்

இந்திய வானிலையியல் துறை / கங்கா நகரிலுள்ள தானியங்கி வானிலை நிலையம்.

காப்புறுதி 1 வெப்பம் / சராசரி வெப்பநிலையில் உள்ள உயர்வு

காப்புறுதி குறிக்கோள்

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள வெப்ப உயர்வினால் ஏற்பட்ட எதிர்பார்க்கப்பட்ட பயிர் இழப்பிற்கு காப்புறுதி வழங்குவது.

காப்புறுதி காலக்கட்டம்

ஜனவரி 1 முதல் 31 ஆம் மார்ச் வரைநேர்மாறான வெப்பம் மற்றும் தொகை வழங்கும் அட்டவணை வரையறுக்கப்பட்ட விதைப்புக் காலம்

| காலக்கட்டம் (இரண்டு வாரங்கள்) | ஜனவரி முதல் இரண்டு வாரங்கள் | ஜனவரி இரண்டாவது இரண்டு வாரங்கள் | பிப்ரவரி முதல் இரண்டு வாரங்கள் | பிப்ரவரி இரண்டாவது இரண்டு வாரங்கள் | மார்ச் முதல் இரண்டு வாரங்கள் | மார்ச் இரண்டாவது இரண்டு வாரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| இரண்டு வாரத்திற்க்கான தூண்டுதல் வெப்பம் $^{0}$செ | 12.86 | 13.59 | 14.95 | 16.31 | 19.72 | 22.91 |
| இரண்டு வாரங்களுக்கு சராசரி வெப்பநிலையில் உள்ள உயர்வு $^{0}$செ | தொகை வழங்குதல் (காப்பீடு தொகை விகிதம்) | | | | | |
| 1.0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2.0 | 0.00 | 0.00 | 0.00 | 3.82 | 4.31 | 4.31 |
| 3.0 | 0.00 | 0.00 | 0.00 | 6.76 | 6.57 | 6.57 |
| 4.0 | 0.00 | 3.99 | 3.53 | 9.92 | 8.39 | 8.39 |
| 5.0 | 4.66 | 5.70 | 4.92 | 12.68 | 9.52 | 9.52 |
| 6.0 | 6.60 | 7.04 | 9.20 | 15.17 | 10.78 | 10.78 |

விவரித்தல்

காப்புறுதி ஜனவரி 1 முதல் 31 மார்ச் வரை செயல்படுத்தப்படும். சராசரி வெப்பநிலையில், எந்த இரண்டு வாரங்களிலாவது, தூண்டுதல் வெப்பநிலையிலுள்ள உயர்வு முழுதாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருந்தால், ஈடு தொகை வழங்குதல்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஜனவரி இரண்டாவது இரண்டு வாரங்களில் சராசரி வெப்பநிலையில் 4 டிகிரி செ வெப்பநிலை உயர்ந்துள்ள 3.99 சதவிகிதம் காப்பீடு தொகை ஈடு தொகையாக வழங்கப்படும். அதாவது ரூ. 897.75 (ஒரு எக்டருக்கு) அல்லது ரூ. 339.10 (ஒரு ஏக்கருக்கு) வழங்கப்படும். இத்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிர்ப்பந்தங்களுக்கேற்ப ஒவ்வொரு இரண்டு வாரங்களில் ஏற்பட்டுள்ள உயர்வைக் கொண்டு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள ஈடு தொகை விகிதங்கள் அனைத்தும் கூட்டப்பட்டு இறுதி ஈடு தொகையாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மொத்தக் காப்புறுதித் தொகை ஒரு எக்டருக்கு ரூ. 13,500 அல்லது ஒரு ஏக்கருக்கு ரூ. 5400 ஆகும்.

காப்புறுதி 2

பருவமல்லாத மழைப் பொழிதல்

காப்புறுதி குறிக்கோள்

அதிகமாகவோ / பருவமல்லாத மழைநீரால் ஏற்படும் எதிர்பார்க்கப்பட்ட பயிர் இழப்பிற்கு காப்புறுதி வழங்குவது.

காப்புறுதி காலக்கட்டம்

பிப்ரவரி 1 முதல் மார்ச் 31 வரை

மழைநீர்  மற்றும் ஈடு தொகை அட்டவணை

வரையறுக்கப்பட்ட விதைப்புக்காலம்

| காலக்கட்டம் (இரண்டு வாரங்கள்) | ஜனவரி முதல் இரண்டு வாரங்கள் | ஜனவரி இரண்டாம் இரண்டு வாரங்கள் | பிப்ரவரி முதல் இரண்டு வாரங்கள் | பிப்ரவரி இரண்டாம் இரண்டு வாரங்கள் | மார்ச் முதல் இரண்டு வாரங்கள் | மார்ச் இரண்டு இரண்டு வாரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| தினசரி மழைநீர் (மி.மீ) அதிக அளவிற்கு மேல் | ஈடுதொகை வழங்குதல் (காப்பீடு தொகை விகிதம்) | | | | | |
| 5 | | | 0 | 0 | 0 | 0 |
| 10 | | | 0 | 0 | 0 | 0 |
| 20 | | | 5 | 5 | 5 | 5 |
| 30 | | | 10 | 5 | 5 | 5 |
| 40 | | | 15 | 10 | 5 | 5 |
| 50 | | | 20 | 15 | 5 | 5 |

விவரித்தல்

காப்புறுதி பிப்ரவரி 1 முதல் 31 மார்ச் வரை செயல்படுத்தப்படும். எந்த ஒரு இரண்டு வாரங்களிலாவது, தினசரி மழைநீரின் அளவு 20 மி.மீக்கு மேல் சென்றால், ஈடு தொகை

வழங்குதல் தொடங்கிவிடும். வெவ்வேறு இரண்டு வாரக் காலங்களில் 20 மிமீ அளவுக்கு மேல் பெறுகின்ற மழைநீர் அளவைக் கொண்டு வழங்கப்படும். ஈடு தொகைகள் (காப்பீடு தொகை விகிதம்) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக பிப்ரவரி முதல் இரண்டு காரக் காலத்தில், தினசரி மழைநீரின் அளவு 45 மிமீ எனவே காப்பீடு தொகையில் 15 சதவிகிதம் ஈடு தொகையாக வழங்கப்படும். ஏக்கருக்கு ரூ. 1350.00 வழங்கப்படும். இத்திட்டத்தின் விதி முறைகள் மற்றும் நிர்ப்பந்தங்களுக்கேற்ப ஒவ்வொரு இரண்டு வாரக் காலத்தில் ஏற்பட்டுள்ள உயர்வைக் கொண்டு, அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள ஈடு தொகை விகிதங்கள் அனைத்தும் கூட்டப்பட்டு, இறுதி ஈடு தொகையாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மொத்தக் காப்புறுதி தொகை ஒரு எக்டருக்கு ரூ. 6750 அல்லது ஒரு ஏக்கருக்கு ரூ. 2700 ஆகும்.

காப்புறுதி 3

உறைபனி

காப்புறுதிக் குறிக்கோள்

உறைபனி நிகழ்வால் ஏற்படும் எதிர்பார்க்கப்பட்ட பயிர் இழப்பிற்கு, காப்புறுதி வழங்குவது.

காப்புறுதி காலக்கட்டம்

டிசம்பர் 1 முதல் 31 ஜனவரி வரை

நிகழ்வின் வரையறை

0 டிகிரி செ அல்லது அதற்கும் குறைந்த வெப்பநிலை தொடர்ந்து 3 அல்லது அதற்கு மேலான நாட்கள் நிகழ்வது.

உறைபனி ஈடுதொகை வழங்கும் அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| நிகழ்வு காலங்கள் (நாட்களின் எண்ணிக்கை) | 3 | 4 | 5 |
| ஈடுதொகை வழங்குதல் (காப்பீடு தொகை சதவிகிதம்) | 5 | 7 | 10 |

உதாரணமாக, இரவு வெப்பநிலை 0 டிகிரி செ அல்லது அதற்கு குறைந்தே 4 நாட்கள் இருந்தால், காப்பீடு தொகையில் 10 சதவிகிதம் ஈடு தொகையாக வழங்கப்படும். அதாவது ஒரு எக்டருக்கு ரூ. 1575.00 அல்லது ஒரு ஏக்கருக்கு ரூ. 630.00 திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிர்ப்பந்தகளுக்கேற்ப, மேலே கொடுக்கப்பட்டது போலே, டிசம்பர் 1 முதல் 31 ஜனவரி வரையில் இருக்கின்ற ஈடுதொகை விகிதங்கள் அனைத்தையும் கூட்டி இறுதியாக ஈடுதொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மொத்தக் காப்புறுதி தொகை ஒரு எக்டருக்கு ரூ. 2250 அல்லது ஒரு ஏக்கருக்கு ரூ. 900 ஆகும்.மூன்று காப்பீடு காப்புறுதிகளை ஒரு விவசாயி பெறும் பட்சத்தில் ஒரு எக்டருக்கு ரூ. 337.50 அல்லது ஒரு ஏக்கருக்கு ரூ. 135.00 வெகுமதியாக செலுத்தினால் போதும்.